திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். அங்கே அதிகமாக ஆதி திராவிடர் மக்களும், மலைவாழ் மக்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே ஊனமுற்றோர் இல்லம், முதியோர் இல்லம், ஆதரவற்றோர் இல்லம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர் இல்லமும், முதியோர் இல்லமும் அரசால் நடத்தப்படுபவை அல்ல. தன்னார்வு நிறுவனங்கள்தான் அவற்றைச் சிறப்பாக நடத்தி வருகின்றன. அப்படி தன்னார்வு நிறுவனம் ஏதாவது சத்திய மங்கலம் தொகுதியில் இருந்தால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்தத் தன்னார்வு நிறுவனத்தை அரசுக்குப் பரிந்துரை செய்தால், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

93—

தமிழ்நாட்டில் மாநில வனவள வாரியம் அமைத்தல்.

*11736—திரு. எச். எம். ராஜு:

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாநில வனவள வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் மாநில வனவள வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

1993 டிசம்பர் 30]

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில வனவள வாரியம் அதாவது "ஸ்டேட் ஃபாரஸ்ட் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன்" என்பது ஒரு முக்கியமான வாரியம் ஆகும். மாநில வனத்துறையினால் வன வளம் காப்பாற்றப்படவும், சீரிய வகையில் வனவளத்தைப் பெருக்கவும் இந்த வாரியத்தின் மூலமாக சிறப்பான முறையில் செயல்பட இயலும். முறையாக வனவளம் காப்பாற்றப்பட்டால்தான் மலைப்பிரதேசங்களில் நிலச்சரிவு ஏற்படாது. இந்த வாரியத்தில் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஓய்வுபெற்ற வனத்துறை உயர் அதிகாரிகள் ஆகியோரை உறுப்பினர்களாகவோ அல்லது அட்வைசரி கமிட்டி மெம்பர்களாகவோ நியமித்து அந்த வகையில் இந்த வாரியம் செயல்படலாம். ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் இந்த மாதிரி வாரியம் சிறந்த முறையில் செயல்பட்டுக்கொண்டிருப்பதை நாம் அறிகிறோம். ஆகவே, இந்த மாதிரி வாரியத்தைத் நம்முடைய மாநிலத்திலும் உடனடியாக அமைப்பதற்கு மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு வனப்பகுதிகளைப் பாதுகாத்து, சீரமைத்து மேம்படுத்துவதை தன்னுடைய முக்கிய நோக்கமாகக் கொண்டு வனச் செல்வங்களை இதுகாறும் பாதுகாத்து வருகிறது. இதன் அடிப்படையில் தமிழகத்தில் 22 திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. தமிழகத்தைக் காட்டிலும் அதிகமாக வனப்பகுதிகள் மிகுந்து இருக்கிற கேரளம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் இப்படிப்பட்ட மாநில அளவிலான வனவள வாரியங்கள் இல்லை. ஆனால், தமிழகத்தைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் என்கிற ஒரு கழகம் திருச்சியில் அமைக்கப்பட்டு காகித ஆலை மற்றும் விறகுகள் உற்பத்தி செய்கிற கழகத்தை வைத்திருக்கிறோம். அதேபோன்று குன்னூரைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் வைத்திருக்கிறோம். ரப்பர் உற்பத்தி செய்வதற்காக நாகர்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு அரசு ரப்பர் கழகம் வைத்திருக்கிறோம். எனவே, இதைத் தவிர்த்து வேறு வாரியங்கள் அமைக்கும் எண்ணம் இதுகாறும் இந்த அரசினிடத்தில் இல்லை. அத்தகைய செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதை மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் 4 அல்லது 6 மண்டலங்கள் ஆகப் பிரித்து காடுகள் நிறைந்த நீலகிரி போன்ற மாவட்டங்களில் மண்டல அலுவலகம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகாறும் மண்டலங்கள் இருக்கின்றன. அதாவது வன வளத்தைப் பாதுகாப்பதற்கு மண்டலங்கள் இருக்கின்றன. ஆனால், இந்த வனத்துறையைப் பொறுத்தவரையில் திட்டங்கள் என்பது வேறு பல்வேறு திட்டங்களினுடைய அடிப்படையில் இருக்கிறது. ஒரு திட்டம் கூழ்மரத் தோட்டங்கள் வளர்த்தல். இன்னொன்று கடலோரப் பகுதிகளில் புயல் காற்றுத் தடுப்புத் தோட்டங்கள் அமைத்தல், அழிந்துவரும் காடுகளில் வனத்தோட்டங்கள் வளர்த்தல், சுற்றுப்புற மேம்பாடு மற்றும் தீவன மேம்பாட்டுப் பணிகளைச் செய்தல், மூங்கில் தோட்டங்கள் அமைத்தல், சந்தன மரங்களை வளர்த்தல், காட்டில் மரத் தோட்டங்கள் அமைத்தல், மரச் செடிகள் பெருக்கும் திட்டம், சிறுபடுபொருட்கள் உற்பத்தித் திட்டம் இப்படி 22 திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றி வருகிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் மிக அதிகமாக மரங்கள் பல்வேறு சமூக விரோதிகளால் வெட்டப்படுகின்றன. ஆனால், கிட்டத்தட்ட 50, 60 வருடங்களாக கோத்தகிரி வட்டத்தில் உள்ள குஞ்சம்பாறை என்ற இடத்தில் சோதனைச் சாவடி இருந்து வந்தது. அது அரசால் திடீரென்று எடுக்கப்பட்டுவிட்ட காரணத்தால்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனி வாரியம் அமைக்கப்படுமா என்பது மூலக்கேள்வி. ஆனால், நீங்கள் ஏதோ ஒரு இடத்தில் ஒரு செக் போஸ்ட் இருக்கிறது. அது சரியாக நடக்கவில்லை, மரங்களை வெட்டிக்கொண்டு போகிறார்கள் என்று கேட்பது எப்படி தொடர்புடைய துணைக் கேள்வியாகும்? எனவே, தனிக் கேள்வி போடவும். டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Tamil Nadu Priv e Forests Act" and "Tamil Nadu Hill Areas Trees Preservati Act". என்ற சட்டங்களை வரைமுறைப்படுத்தவும், சீரமைக்கவும் சட்ட மன்ற உறுப்பினர் திரு. எச். எம். ராஜு அவர்கள் கூறியதைப் போல தமிழகத்தில் வனவள வாரியம் அமைக்கப்படுமானால் தமிழகத்தின் வனவளங்களைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் தமிழகத்தினுடைய மண்ணைப் பாதுகாப்பதற்கும் ஒரு வாய்ப்பு ஏற்படும். எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் ஆகியோரை அங்கத்தினர்களாகக் கொண்டு இந்த வாரியத்தை அமைக்க அரசு முன்னுரிமை கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1993 டிசம்பர் 30]

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியம் குறித்து நான் ஏற்கெனவே மிகத் தெளிவாக எடுத்து வைத்திருக்கிறேன். ஆனால், தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகம் தழுவிய அளவுக்கு வனத்துறையினுடைய ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கின்ற எண்ணத்தைக் கொண்டிருக்கிறார்கள். அதை நிறைவேற்ற வனத்துறையோடு வேண்டியிருக்கிறார்கள். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும் மற்றும் வனத்துறை, வனம் சம்பந்தப்பட்ட மிகச் சிறந்த வல்லுநர்களையும் இதில் இணைப்பதற்கு இதய தெய்வம் இன்றைக்கு ஒரு ஆலோசனையை இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறார்கள். மிக விரைவிலேயே நிறைவேற்றப்படும். எனவே, அதை நிறைவேற்றுகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சிந்தனை அதிலே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 94, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

94—

குளிர்சாதனம் செயல்படாத திரையரங்குகளின் உரிமத்தை ரத்து செய்தல்.

*9058—திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு செய்திமற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள குளிர்சாதனம் பொருத்திய திரையரங்குகளில் குளிர்சாதன இயந்திரம் செயல்படாத நிலையிலும், கட்டணம் வாங்கும் திரையரங்குகளின் உரிமத்தை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி, மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுட்டும் விரல் அசைவில் எட்டு திசையனைத்தும்
வெற்றிக் கொடி பிடித்த தலைவியாய்
வான் எட்டும் புகழ்பல டைத்து எதிர்க்கும் பகை முடித்து
இமயம் பணிய வைத்த முதல்வியாய்